## அரைவேக்காடுகளும்... வரலாறும்!

தமிழ்த்தாய் வாழ்த்து தொடர்பாக, அரைவேக்காட்டுத்தனமான செயல்கள், கருத்துகள் எழுந்த நிலையில், உலகெங்கிலும் வசிக்கும் தமிழர்கள் ‘தெக்கணமும் அதிற்சிறந்த திராவிட நல் திருநாடும்’ என்பதை உலகத்துக்கே அறிவிக்கும் வகையில் பரப்பினர். இந்தக் கருத்தை பேரா.த.செயராமன் பதிவு செய்துள்ளார்.

“திராவிட என்ற ஒற்றைச் சொல், தங்கள் அரசியலுக்கு ஏற்க முடியாத ஒன்று என்பதற்காக, சுந்தரனாரின் பாடலில் கைவைக்க முற்படுவது என்பது அறிவுடைய செயல் அல்ல. ஒரு பாடலை அல்லது ஓர் இலக்கியத்தை நாம் படிக்கும்போது, அது எழுந்த காலம் மற்றும் அதன் வரலாற்றுப் போக்கோடு பொருத்திப் பார்த்துப் புரிந்து கொள்ள வேண்டும் என்பது அவசியம்.

அடிப்படையாக எதையும் அறிந்து கொள்ளாமல், தங்களை தமிழ் உணர்வாளர்களாகவும், தமிழினத்தைக் காக்க வந்தவர்களாகவும் காட்டிக்கொள்ள, உளறிக் கொட்டுவது, ஒருபுறம் நகைப்பாக இருந்தாலும், மற்றொருபுறம் ஆரியத்தின் அடியாட்களாகக் களம் இறங்கி, இவர்கள் செய்யும் செயல்கள், கடந்த காலத்தில் ஈட்டிய சமூக விடுதலையை நொறுக்கிவிடக் கூடாதே, என்ற கவலையும் எழுகிறது.

தமிழ்மொழி வாழ்த்தை இப்போதும் கூட பலர் எழுதலாம். இதற்கு முன்பும் கூட பலர் எழுதி இருக்கிறார்கள். யார்தான் வாழ்த்துப்பா எழுத மாட்டார்கள்? ஆனால், மனோன்மணீயம் சுந்தரனார் எழுதிய பாடல் வரலாற்றை வடிவமைத்திருக்கிறது; வரலாற்றைப் பதிவு செய்திருக்கிறது. அவருடைய பாடலை தமிழ்த்தாய் வாழ்த்தாக அறிஞர்கள் குழு தேர்ந்தெடுத்ததற்குக் காரணம், அந்தப் பாடலோடு இணைந்து இருக்கக்கூடிய வரலாற்றுப் பின்புலமும், வரலாற்றுப் பங்களிப்பும் ஆகும்.

இப்பாடலைத் திறனாய்வு செய்த அறிஞர்கள் அவருடைய பன்முக அறிவாற்றல் எந்தெந்த வரிகளில் எப்படி வெளிப்படுகிறது என்பதையெல்லாம் பதிவு செய்துள்ளார்கள். கடந்த காலத்தில், எந்தெந்தக் காலங்களில் எந்தெந்தக் கருத்துகளையும், சொற்களையும் கைக்கொண்டு, இயக்கமாக்கி, இத்தமிழினம் போராடி வந்திருக்கிறது என்பதை அறிந்தவர்கள், மனோன்மணீயம் சுந்தரனார் பாடலில் கை வைக்கத் துணிய மாட்டார்கள்.”

## :ப்ளாஷ்பேக்





ஆர்.வடிவேலு

### கிளைக் கழகத்தில் இருந்து பயணம்!

2003-ஆம் ஆண்டு கிளைக் கழக இளைஞர் அணி அமைப்பாளராக நியமிக்கப்பட்டதற்கு, அப்போதைய மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் சுந்தரமூர்த்தி மற்றும் திமிரி பேரூர் அமைப்பாளர் ஆகியோருடன் இணைந்து, அன்றைய இளைஞர் அணிச் செயலாளர் இன்றைய கழகத் தலைவர் தளபதி அவர்களைச் சந்தித்து வாழ்த்துப் பெற்றோம். ஓசூர் மாநகரக் கழகத்தின் முதல் வட்டக் கழகச் செயலாளராகப் பொறுப்பு வகித்து வரும் இவ்வேளையில், இதை எல்லாம் எண்ணிப் பார்த்து மகிழ்கிறேன்.

**– ஆர்.வடிவேலு, வட்டக் கழகச் செயலாளர், ஓசூர் மாநகர மேற்கு.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018. வாட்ஸ்அப் எண் : 90033–24473
மின்னஞ்சல்: youthwing@dmk.in

## கருவூலம்

### தொழிற்சங்கப் பணிகளில் நீதிக்கட்சி!

1941-1942 ஆம் ஆண்டுகளில் சென்னை மாநகரத்தின் மேயராக இருந்தவர் வி.சர்க்கரை செட்டியார். நீதிக் கட்சியில் செயல்பட்டதுடன், தொழிற்சங்கத் தலைவராகவும் பல பணிகளை முன்னெடுத்தவர். சென்னையில் மண்ணெண்ணெய் தொழிலாளர் சங்கத்தைத் தொடங்கியவர்களில் ஒருவர். திரு.வி.க. அவர்களுடன் இணைந்து சென்னைத் தொழிலாளர் சங்கத்தின் ஆறு மாத வேலை நிறுத்தப் போராட்டத்தில் இரவு பகல் பாராமல் பணியாற்றியவர். வழக்கறிஞர் பட்டம் பெற்ற அவர், அந்தத் தொழிலைச் செய்யாமல் தொழிலாளர் உரிமைகளுக்காக முன் நின்றார்.

# சீரணி → இளைஞர் அணி

34

**ந.வினோத்குமார்**

தி.மு.கழகத்தால் இளைஞர்களும், இளைஞர்களால் கழகமும், இந்த இருவரால் தமிழ்ச் சமூகமும் கண்ட மேம்பாடு குறித்துப் பேசும் தொடர் ‘சீரணி முதல் இளைஞர் அணி வரை’...

*1974-ஆம் ஆண்டில் சீரணி தனி அலுவலராக இருந்த எம்.அப்துல்ரஹீம் ‘தமிழரசு’ இதழில் தான் எழுதிய கட்டுரையில், 1967-ஆம் ஆண்டு முதல் 1974-ஆம் ஆண்டு வரை சீரணியினர் செய்த சாதனைகளைப் பட்டியலிடுகிறார். அதுகுறித்து, அவர் எழுதும் போது முக்கியமான ஒரு சாதனையைப் பற்றிக் கூறுகிறார். அதுதான் ‘சீரணி அறிவகங்கள்’.*

*“பொது மக்கள் மத்தியில் அறியாமையை அகற்றவும், நாட்டில் நடைமுறைகளையும், அரசின் சாதனைகளையும் அறிவிக்கும் வகையில், தமிழகம் முழுவதும் 534 சீரணி அறிவகங்கள், ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திலும் ஒரு சீரணி அறிவகம், தேர்ந்தெடுக்கப்பட்ட 100 பேரூராட்சி மன்றங்களிலும் ‘சீரணி அறிவகங்கள்’ என்ற எண்ணிக்கையில் செயல்படுகின்றன. இவ்வறிவகங்கள் வாரத்தில் 3 அல்லது 4 நாட்கள் மாலை நேரத்தில் நடைபெறும். ஒவ்வொரு அறிவகத்திற்கும் ஒரு சீரணித் தொண்டர் பொறுப்பாளராக நியமிக்கப்பட்டு உள்ளார். இவருக்குக் கௌரவ ஊதியமாக மாதம் ஒன்றுக்கு ரூ.5 வழங்கப்பட்டு வருகிறது.*

*சீரணி அறிவகங்களுக்கு நாள், வார, மாத இதழ்கள் வழங்கப்பட்டு வருகின்றன. இச்சீரணி அறிவகங்கள், தமிழக அரசின் சாதனைகள், முற்போக்கு நாடுகளில் உள்ள நிலை, சமூகக் கேடுகளைக் களைதல் ஆகியவற்றினைத் தெரிவிக்கும் பகுத்தறிவு மன்றங்களாகச் செயல்படுகின்றன” என்று அவர் குறிப்பிட்டுள்ளார். அது போன்ற அறிவகங்களை நமது இளைஞர் அணி தற்போது உருவாக்கி வருகிறது என்பது, சீரணியின் தொண்டு இன்றும் தொடர்கிறது என்பதற்கான அடையாளம்.*

*1967-ஆம் ஆண்டு ஜூலை 1 முதல் 1974-ஆம் ஆண்டு மார்ச் 31 வரை தமிழகம் முழுவதும் நிறைவேற்றப் பட்ட சீரணிப் பணிகள்:*

ஓவியம் : ரவி பேலட்



## சீரணி சாதனைகள் பாரீர்!

| வ. எண் | பணிகள் | எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | பள்ளிக் கட்டடங்கள் | 1,306 |
| 2 | இணைப்புச் சாலைகள் | 1,661 |
| 3 | தூர்வாரப்பட்ட நீர்நிலைகள் | 1,627 |
| 4 | திறந்தவெளி அரங்குகள் | 160 |
| 5 | வானொலி, இளைஞர் மனமகிழ் மன்றங்கள் | 585 |
| 6. | தரைமட்ட குடிநீர்த் தொட்டிகள் | 27 |
| 7 | கதிரடிக்கும் களங்கள் | 12 |
| 8 | சமுதாயக் கூடங்கள் | 83 |
| 9 | பேருந்து நிழற்குடைகள் | 64 |
| 10 | தரிசு நிலங்களை விளைநிலங்களாக மாற்றுதல், துப்புரவுப் பணிகள் உள்ளிட்ட இதர சமூகப் பணிகள் | 40,776 |

மேற்கண்ட பணிகளின் மொத்த மதிப்பு - ரூ. 2,02,50,960

அரசின் செலவு - ரூ.85,72,226.

மாவட்ட வாரியான சாதனைகள்:

| வ. எண் | மாவட்டங்கள் | பணிகள் எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | செங்கற்பட்டு | 1,938 |
| 2 | வட ஆற்காடு | 3,924 |
| 3 | தென் ஆற்காடு | 3,846 |
| 4 | தஞ்சாவூர் | 2,313 |
| 5 | திருச்சிராப்பள்ளி | 5,142 |
| 6. | சேலம் | 6,575 |
| 7 | தருமபுரி | 574 |
| 8 | கோயம்புத்தூர் | 14,035 |
| 9 | நீலகிரி | 286 |
| 10 | மதுரை | 4,726 |
| 11 | இராமநாதபுரம் | 2,594 |
| 12 | திருநெல்வேலி | 1,297 |
| 13 | கன்னியாகுமரி | 187 |
| 14 | சென்னை | 527 |

*மக்களால், மக்களாலேயே, மக்களுக்காக... என்ற ஜனநாயகத்தின் மூலாதாரக் கொள்கை, முழுமையாகச் செயல்படுத்தப்பட்ட ஒரு திட்டமாக சீரணி இருந்தது என்பதுதான், இந்தச் சாதனைகள் நமக்குக் கடத்தும் செய்தி..!*

**...வெற்றிநடை போடும்.**

# பொய்ப்பெட்டி

34

**கோவி.லெனின்**

“கழகம் சந்திக்கும் அவதூறுகள் குறித்த வினாவும் – விடையும்...”

***சென்னைத் தொலைக்காட்சி நிறுவன (டி.டி.தமிழ்) நிகழ்ச்சியில் பாடப்பட்ட தமிழ்த்தாய் வாழ்த்தில், ‘தெக்கணமும் அதிற்சிறந்த திராவிட நல் திருநாடும்’ என்ற வரியைத் தவிர்த்து, தமிழை அவமதித்த ஆளுநரை எல்லோரும் கண்டித்தால், நாம் தமிழர் கட்சி ஒருங்கிணைப்பாளர் சீமானுக்கு ஏன் கோபம் வருகிறது? ஆட்சிக்கு வந்தால் தமிழ்த்தாய் வாழ்த்தை மாற்றுவோம், திராவிடத்தை நீக்குவோம் என்று கூவுகிறாரே?***

*ஆளுநரையும் அவர் முன்வைக்கும் ஆர்.எஸ்.எஸ். கருத்துகளையும் திராவிட இன உணர்வுடன், தமிழ் மொழி உணர்வுடன் தமிழ்நாடே கண்டித்துள்ளது. சீமானும் அவரது ஆட்களும் வெளிப்பார்வைக்குத் தமிழ்த் தேசியம் பேசினாலும், ‘குடி’ப் பெருமை’, ‘வெறுப்பரசியல்’, ‘தூய்மைவாதம்’, ஹிட்லரின் நாஜிக் கொள்கைக்கு ஆதரவு போன்றவற்றால், அவர்கள் உள்ளுக்குள் போட்டிருப்பது ஆர்.எஸ்.எஸ்.ஸின் காவி டவுசர்தான். ஆர்.எஸ்.எஸ்.ஸின் சனாதன-வருணாசிரமக் கொள்கைக்கு எதிரான சமூக நீதிக் கொள்கையைக் கொண்டது திராவிடக் கோட்பாடு. அதனால்தான், ஆர்.எஸ்.எஸ். அஜெண்டாவை தமிழ் முலாம் பூசிப் பேசிக்கொண்டிருக்கிறார் சீமான். திராவிடம் ஆரியத்துக்கும் அதன் ஆதிக்கத்திற்கும்தான் எதிரானது. தமிழுக்கு அல்ல, என்பதை மக்கள் நன்றாக உணர்ந்திருக்கிறார்கள். அவர்களிடம் குழப்பத்தை ஏற்படுத்த வேண்டும், என நினைக்கிறார்கள் அரசியல் நிலைப்பாட்டில் குழம்பிப் போயிருக்கும் சீமான் கட்சியினர்.*

*பண்டிதர் அயோத்திதாசர் தொடங்கிய இயக்கம், ‘திராவிட மகாஜன சபை’. ‘சைவ சித்தாந்த சபை’ தொடங்கிய பயிற்சியகம் திராவிட வேத பாடசாலை. **‘திராவிடர்கள்’** என்பது தமிழ்மொழியைப் பேசுபவர்களைக் குறிக்கிறது என்று ஆய்வுப் பூர்வமாக விளக்கியிருப்பவர், டாக்டர் அம்பேத்கர். இராமாயணக் கதை என்பது வடபுலத்து ஆரியர்களுக்கும் தென்னிந்திய திராவிடர்களுக்கும் நடந்த சண்டைதான் என எழுதியவர் பண்டித ஜவகர்லால் நேரு. அதுமட்டுமல்ல,*



*சீமானும் அவர்களது ஆட்களும் தங்களின் அரசியலுக்காக இன்னமும் ஈழத்தமிழர்களைச் சுரண்டிக் கொண்டிருக்கும் நிலையில், அந்த ஈழத்தமிழர்களே, 1940-இல் பிரிட்டிஷ் ஆட்சியிலும், பின்னர் ஆயுதப் போராட்டச் சூழலில் கியூபாவில் நடந்த மாநாட்டிலும் தமிழர்கள் என்பவர்கள், திராவிட மொழிக் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் என்றே பதிவு செய்திருக்கிறார்கள். சீமான் கட்சியினர் ஈழத்தமிழர்களுக்கும் உண்மையாக இல்லை, இங்குள்ள தமிழர்களிடமும் உண்மையைப் பேசுவதில்லை.*

## திராவிடத்துக்கும் – ஆரியத்துக்கும் எதிரான போர்!


**சீமான் கட்சியினர் ஈழத்தமிழர்களுக்கும் உண்மையாக இல்லை, இங்குள்ள தமிழர்களிடமும் உண்மையைப் பேசுவதில்லை.**

**...வினா தொடரும்.**

## திராவிடத்தால் வாழ்கிறோம்

640

எழுத்து: கோவி.லெனின்
ஓவியம்: கி.சொக்கலிங்கம்




-வாழ்வோம்

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 28179191, 28179131